**TNVR020000482026**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 09-ஆம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.74/2026</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>மல்லி காவல் நிலையம்,<br>குற்ற எண்.146/2025 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர் | | பிரதாப்சிங், (27/26),<br>த/பெ.சப்பானி,<br>H1 Block. 713 போலீஸ் காலனி,<br>வடக்கு திருவில்லிபுத்தூர். |
| சம்பவம் நடந்த நாள் | | 14.11.2025 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 15.11.2025 |
| எதிரி கைதான நாள்<br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 29.11.2025 அன்று கைது செய்யப்பட்டு காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br>– | 06.07.2026<br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 17.03.2026 |
| குற்றம் | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழ் |

| | | |
|---|---|---|
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)BNS–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 27.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 27.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 22.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.4 06.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 09.07.2026 |
| எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி MBA., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.T.சுரேஷ் நெப்போலியன், BA., B.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவுமில்லை. |

இவ்வழக்கானது 09.01.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 09.07.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.T.சுரேஷ் நெப்போலியன், BA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 14.11.2025 ம் தேதி அவருக்கு சொந்தமான TN 84 P 5637 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் பைனான்ஸ் பணம் வசூல் செய்வதற்காக சிவகாசிக்கு சென்றுவிட்டு பின்னர் திரும்பவும் திருவில்லிபுத்தூர் வருவதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் சிவகாசியில் இருந்து திருவில்லிபுத்தூர் செல்லும் கிழமேல் மெயின்ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இரவு 09.45 மணியைப் போல் கார்த்திகைப்பட்டி Bell Catering College அருகில் வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் அவருக்கு எதிர் திசையில் TN 94 B

2651 எனற் எண் கொண்ட Maruthi Suzuku Swift Dzire காரினை ஓட்டி வந்த எதிரி மேற்படி வாகனத்தினை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து வாதி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் இருசக்கர வாகனத்துடன் கீழே விழுந்த வாதிக்கு இரண்டு கால்களிலும் இடது கையிலும் கொடுங்காயம் ஏற்படுத்திய எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழும், தண்டிக்கத்தக்கவர் என்று மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.4 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.12 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4-(1) அ.சா.1 திருமதி.முத்துச்செல்வி தனது சாட்சியத்தில், தற்போது வத்திராயிருப்பில் குடியிருந்து வருவதாகவும், தான் இல்லத்தரசியாக இருந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனது கணவர் பிரவீன் கூறியதன் பேரில் தெரிந்து கொண்டதாகவும், தனது கணவர் திருவில்லிபுத்தூர் ராஜீவ் காந்தி நகரிலுள்ள மதுரா பைனான்ஸ் ஐ சேர்ந்த நிறுவனமான கிராமின் குட்டாவில் தனது கணவர் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வருகிறார் என்றும், பொதுவாக தனது கணவர் காலை 06.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு இரவு 11.00 மணிக்கு தான்

வீட்டிற்கு வருவார் என்றும், கடந்த 14.11.2025 அன்று இரவு வெகுநேரமாகியும் வீட்டிற்கு வராததால் தான் தனது கணவருக்கு போன் செய்தபோது வேறொரு நபர் தனது கணவர் போனை எடுத்து மல்லி அருகேயுள்ள கார்த்திகைப்பட்டி விலக்கில் தனது கணவர் விபத்து ஏற்பட்டு கிடப்பதாகவும் காதிலிருந்து ரத்தம் வருவதாகவும் வீட்டில் பெரியவர்கள் யாராவது இருந்தால் உடனே அங்கு வரச்சொல்லுமாறு தன்னிடம் கூறினார் என்றும், தான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு சம்பவயிடத்திலிருந்த யாரோ 108 ஆம்புலன்ஸ் மூலம் தனது கணவரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து விட்டார்கள் என்றும், அங்கு சென்று தனது கணவரிடம் விசாரித்தபோது தான் சிவகாசியிலிருந்து திருவில்லிபுத்தூர் வந்துகொண்டிருந்தபோது தனக்கு எதிரே வந்த சிப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார் என்றும், தனது கணவருக்கு இடது காலில் கணுக்காலுக்கு கீழ் எலும்புகள் நொறுங்கியிருந்தது என்றும், வலது காலில் தொடை எலும்பு உடைந்ததாக கூறினார்கள் என்றும், மேலும் இடது கை உடைந்திருந்தது என்றும், அங்கங்கே உடலில் சிராய்ப்பு காயங்களும் இருந்தது என்றும், தனது கணவரை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு 3 நாட்கள் சிகிச்சைக்காக அவரை அனுமதித்திருந்தபோது சரியாக சிகிச்சை கொடுக்கப்படாத தால் தனியார் மருத்துவமனையில் வைத்து பார்த்துக்கொள்வதாக எழுதிக்கொடுத்து விட்டு திருவில்லிபுத்தூரிலுள்ள வேல் தனிாயர் மருத்துவமனையில் அவரை சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், தனது கணவரை விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தபோது அங்கு வந்த போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்திலுள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலம் அசாஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.பிரவீன் தனது சாட்சியத்தில், தற்போது வத்திராயிருப்பில் குடியிருந்து தான் பைனான்ஸில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து

வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அசா.1 தனது மனைவி என்றும், கடந்த 14.11.2025 அன்று பணம் வசூல் செய்துவிட்டு இரவு 09.00 மணியளவில் சிவகாசியிலிருந்து திருவில்லிபுத்தூரிலுள்ள மதுரா பைனான்ஸ் கிளைக்கு தனது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது கார்த்திகைப்பட்டி விலக்கு அருகில் TN 94 B 2651 என்ற பதிவெண் கொண்ட காரானது அதிவேகமாக வந்து தனது இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், பின்னர் அங்கிருந்து தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைதது சென்றார்கள் என்றும், மேற்படி விபத்தில்எனக்கு இரண்டு கால்களும் இடது கையும் உடைந்து விட்டது என்றும், அங்கிருந்து தன்னை மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு 3 நாட்கள் சிகிச்சை பெற்றுவிட்டு மேல்சிகிச்சை பெற்றுவிட்டு அங்கிருந்து திருவில்லிபுத்தூர் வேல் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், வேல் மருத்துவமனையில் தனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றும், மேற்படி சம்பவம் சம்மந்தமாக போலீசாரிடம் தனது மனைவியான அசா.1 புகார் கொடுத்தார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.சுரேஷ்தங்கம் தனது சாட்சியத்தில், டக்நத வருடம் கடைசி மாதம் ஒரு நாள் தானும் ஞானசேகரும் மானகசேரியிலிருந்து திருவில்லிபுத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்த போது போலீசார் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள் என்றும், விபத்து நடந்ததாக தங்களிடம் கூறினார்கள் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(4) அ.சா.4 திரு.ரகுபதி தனது சாட்சியத்தில், தான் தற்போது மல்லி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 14.11.2025 அன்று 22.45 மணிக்கு மல்லி காவல்நிலைய சார்பு ஆய்வாளராகிய தான் நிலையத்திலிருந்தபோது சிவகாசி அரசு மருத்துவ

மனையிலிருந்த கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று விசாரித்ததில் காயம்பட்ட பிரவீன் என்ற பிரவீன்காந்த் சிவகாசி அரசு மருத்துவ மனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்ட விவரம் தெரிந்து மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த வத்திராயிருப்பு மேல தெருவை சேர்ந்த பிரவீன் என்ற பிரவீன் காந்த் வயது 25 என்பவரை பார்த்து பின்னர் அவருக்கு உதவியாக இருந்த அவரது மனைவி முத்துச்செல்வி என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை 15.11.2025 அன்று 19.00 மணிக்கு பதிவு செய்து 20.00 மணிக்கு நிலையம் வந்ததாகவும், புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.146/2025 பிரிவுகள்.281, 125(a) BNS பிரகாரம் வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 20.45 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுரேஷ்தங்கம், ஞானசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பார்வை மகஜர் அசாஆ.4 என்றும், வரைபடம் அசாஆ.5 என்றும், பின்னர் சாட்சிகள் முத்துச்செல்வி, பிரவீன் என்ற பிரவீன்காந்த் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 29.11.2025 அன்று 10.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி பிரதாப்சிங் என்பவரை கைது செய்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து சம்மன் கோரும் நாளில் திருவில்லிபுத்தூர் JM.II நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தி தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்து, பின்னர் இவ்வழக்கில் தொடர்புடைய TN 84 P 5637 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தையும், TN 94 B 2651 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Swiftdzire நாக்கு சக்கர வாகனத்தையும் திருவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வு செய்ய வேண்டி தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆய்விற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர்

16.12.2025 அன்று சாட்சி முத்துச்செல்வி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் விபத்தில் தொடர்புடைய வாகனங்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்த மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றதாகவும், மேற்படி TN 84 P 5637 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.6 என்றும், TN 94 B 2651 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Swiftdzire நாக்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.7 என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பிரவீன் என்ற பிரவீன்காந்த் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் நவீன்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றதாகவும், அ.சா.2 ன் விபத்து பதிவேடு அசாஆ.8 என்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்த மருத்துவர் பாஸ்கர் அம்சத்ராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு அறிக்கை பெற்றதாகவும், அசா2 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசாஆ.9 என்றும், பின்னர் மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் அமித்கண்ணா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்று, விருதுநகர் அரசு மருத்துவமனையில் அசா.2 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று அசாஆ.10 என்றும், மேலும் காயம்பட்ட பிரவீன் என்ற பிரவீன் காந்த் என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய தனியார் மருத்துவமனை மருத்துவர் திருமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனியார் மருத்துவமனையில் அசா–2 க்கு வழஙகப்பட்ட காயச்சான்று அசாஆ.11 என்றும், பின்னர் காயச்சான்று பெற்றதன் தன்மைக்கேற்ப இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281, 125(a) BNS லிருந்து பிரிவுகள்.281, 125(b) BNS ஆக மாறுதல் செய்து சட்ட மாறுதல் அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.12 என்றும், அன்றைய தினமே எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.281, 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக

சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) தீர்வுக்குரிய பிரச்சனை :–

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) புகார்தாரர் கடந்த 14.11.2025 ம் தேதி அவருக்கு சொந்தமான TN 84 P 5637 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் பைனான்ஸ் பணம் வசூல் செய்வதற்காக சிவகாசிக்கு சென்றுவிட்டு பின்னர் திரும்பவும் திருவில்லிபுத்தூர் வருவதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் சிவகாசியில் இருந்து திருவில்லிபுத்தூர் செல்லும் கிழமேல் மெயின்ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இரவு 09.45 மணியைப் போல் கார்த்திகைப்பட்டி Bell Catering College அருகில் வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் அவருக்கு எதிர் திசையில் TN 94 B 2651 எனற் எண் கொண்ட Maruthi Suzuku Swift Dzire காரினை ஓட்டி வந்த எதிரி மேற்படி வாகனத்தினை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து வாதி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் இருசக்கர வாகனத்துடன் கீழே விழுந்த வாதிக்கு இரண்டு கால்களிலும் இடது கையிலும் கொடுங்காயம் ஏற்படுத்தினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க

வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரி பற்றி தனது கணவர் பிரவீன் கூறியதன் பெயரில் தெரிந்து கொண்டதாகவும் தனது கணவர் ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜீவ் காந்தி நகரில் உள்ள மதுரா பைனான்சில் சேர்ந்த நிறுவனமான கிராமின் குட்டாவில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வருவதாகவும், கடந்த 14.11.2025 அன்று இரவு வெகு நேரம் ஆகியும் வீட்டிற்கு தனது கணவர் வராததால் தனது கணவருக்கு போன் செய்தபோது வேறொரு நபர் தனது கணவர் போனை எடுத்து மல்லி அருகே உள்ள கார்த்திகைபட்டி விலக்கில் தனது கணவர் விபத்து ஏற்பட்டு கிடப்பதாகவும், காதிலிருந்து இரத்தம் வருவதாகவும் வீட்டில் பெரியவர்கள் யாராவது இருந்தால் உடனே அங்கு வர சொல்லுமாறு கூறியதாகவும், தான் சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் சம்பவ இடத்தில் இருந்த யாரோ 108 ஆம்புலன்ஸ் மூலம் தனது கணவரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து விட்டதாகவும், அங்கு சென்று தனது கணவரிடம் விசாரித்த போது தான் சிவகாசியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து கொண்டிருந்தபோது தனக்கு எதிரே வந்த ஷிப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும், தனது கணவருக்கு இடது கால் கணுக்காலுக்கு கீழ் எலும்புகள் நொறுங்கி விட்டதாகவும், வலது காலில் தொடை எலும்பும் உடைந்துவிட்டதாகவும், இடது கை உடைந்து விட்டதாகவும் ஆங்காங்கே சிராய்ப்பு காயங்கள் இருந்ததாகவும், பின்னர் தனது கணவரை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு மூன்று நாட்கள் சிகிச்சைக்காக

அவரை அனுமதித்திருந்த போது அங்கு வந்த போலீசாரிடம் தான் புகார் மனு கொடுத்ததாகவும், அங்கு சரியாக சிகிச்சை கொடுக்காததால் தனியார் மருத்துவ மனையில் வைத்து பார்த்துக் கொள்வதாக எழுதி கொடுத்துவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வேல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் கூறியுள்ளார்.

11. மேலும் தனது குறுக்கு விசாரணையில், தான் தொலைபேசியில் அழைப்பு வந்தவுடன் நேரடியாக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு தான் சென்றதாகவும், போலீசார் விசாரணையிலும் தனக்கு போன் செய்த நபர் தனது கணவரை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டதாக தன்னிடம் கூறியதாக தான் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தான் மதுரா பைனான்ஸ் கம்பெனியில் வேலை செய்வதாகவும், கடந்த 14.11.2025 அன்று பணம் வசூல் செய்து விட்டு இரவு 9.00 மணி அளவில் சிவகாசியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மதுரா பைனான்ஸ் கிளைக்கு தனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது கார்த்திகைப்பட்டி விலக்கு அருகே TN 94B 2651 என்று பதிவெண் கொண்ட காரானது அதிவேகமாக வந்து தனது இரு சக்கர வாகனத்தில் மோதியதாகவும், பின்னர் அங்கிருந்து தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் மேற்படி விபத்தில் தனக்கு இரண்டு கால்களும், இடது கையும் உடைந்து விட்டதாகவும், அங்கிருந்து தன்னை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு மூன்று நாட்கள் சிகிச்சை பெற்று விட்டு மேல் சிகிச்சைக்காக வேல் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், மேல் மருத்துவமனையில் தனக்கு அறுவை சிகிச்சை செய்ததாகவும் வழக்கு சம்பந்தமாக தனது மனைவி புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளார்.

13. மேலும் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி விபத்திற்கு பின் கார்த்திகை பட்டியில் உள்ள நபர்கள் தான் தன்னை தூக்கியதாகவும் அவர்கள் தான் 108 ஆம்புலன்ஸ் மூலம் தன்னை மருத்துவமனைக்கு அனுப்பிய தாகவும், அவர்கள் தான் தனது மனைவிக்கும் தகவல் கொடுத்ததாகவும் இவ்வழக்கு சம்பவத்திற்கு முன் வழக்கின் எதிரியை தனக்கு தெரியாது என்றும் இவ்வழக்கின் எதிரி தான் மேற்படி காரை ஓட்டி வந்தார் என்று போலீசார் விசாரித்து தன்னிடம் கூறிய பின்பு தான் தெரிந்து கொண்டதாகவும் சம்பவத்தன்று தான் மது அருந்தவில்லை என்றும் அதற்கு முன் தினம் மது அருந்தி இருந்ததாகவும் கூறியுள்ளார்.

14. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த வருடம் கடைசி மாதம் ஒரு நாள் தானும் ஞானசேகரும் மானகசேரியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது போலீசார் கூட்டமாக நின்று கொண்டிருந்ததாகவும் விபத்து நடந்ததாக தங்களிடம் கூறியதாகவும் இவ்வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடைய தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 14.11.2025 அன்று மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது சிவகாசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று பார்த்ததில் பிரவீன் என்ற பிரவீன்காந்த் சிவகாசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று விட்டு மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்ட விபரம் தெரிந்து மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பிரவீன் என்ற பிரவீன் காந்தை பார்த்து அவருக்கு உதவியாக இருந்த அவரது மனைவி முத்துச்செல்வி கொடுத்த புகார் வாக்குமூலத்தை 15.11.2025 அன்று பதிவு செய்து காவல் நிலையம் வந்ததாகவும், புகார் வாக்குமூலத்தின்

தன்மைக்கேற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மஜசர் மற்றும் வரைபடம் வரைந்ததாகவும் 29.11.2025 அன்று நிலைம் ஆஜராகிய எதிரியை கைது செய்து இரு நபர் ஜாமினில் விடுவித்ததாகவும் பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றதாகவும் மேற்படி பிரவீன் காந்திர்க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றுகளை பெற்றதாகவும் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார்.

16. மேலும் தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் ஆனது ஸ்ரீவில்லிபுத்தூர் டு சிவகாசி பிரதான சாலையில் கார்த்திகைப்பட்டி பெல் கேட்டரிங் காலேஜ் அருகே தான் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அ.சா.2 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் அவர் மது அருந்தி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து மேற்படி அ.சா.2 ன் சாட்சியத்தில் இருந்து அவர் இவ்வழக்கு சம்பவத்தின் போது இவ்வழக்கின் எதிரி தான் மேற்படி வாகனத்தை ஒட்டி வந்தார் என்பதை பார்க்கவில்லை என்பது புலப்படுகிறது. மேலும் போலீசார் விசாரித்து கூறிய பின்பே தான் தெரிந்து கொண்டதாக கூறியுள்ளார். இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை தவிர சம்பவ இடத்தில் இருந்ததாக கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை.புகார்தாரரான அ.சா.1ம் தனது சாட்சியத்தில் இருந்து அவர் வழக்கு சம்பவம் பற்றி தனது கணவரான அ.சா.2 கூறித்தான் தெரிந்து கொண்டுள்ளார் என்பதும் சம்பவத்தன்று எதிரியை நேரில் பார்க்கவில்லை என்றும்

புலப்படுகிறது. அதுமட்டுமின்றி முதல் தகவல் அறிக்கையிலும், TN 94 B 2651 என்ற சிப்ட் காரை ஓட்டி வந்த நபர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

18. மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியும் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 க்கு சிவகாசி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேட்டையும் ஆராய்கையில் அவர் மது போதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 ம் அ.சா.2 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் அவர் மது அருந்தி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளார். எனவே மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் இவ்வழக்கின் எதிரி தான் சம்பவத்தன்று அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனம் ஓட்டி வந்து அ.சா.2 க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்று கூறப்பட்டுள்ள சங்கதிகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வதே நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

21. எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 9-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | திருமதி.முத்துசெல்வி |
| அ.சா.2 | – | திரு.பிரவீன் |
| அ.சா.3 | – | திரு.சுரேஷ்தங்கம் |
| அ.சா.4 | – | திரு.ரகுபதி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | – | வரைபடம் |
| அ.சா.ஆ.6 | – | TN 84 P 5637 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | – | TN 94 B 2651 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8 | – | அ.சா.2 ன் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.9 | – | அ.சா.2 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10 | – | அ.சா.2 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று |

அ.சா.ஆ.11 – தனியார் மருத்துவமனையில் அ.சா.2 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று

அ.சா.ஆ.12 – சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** – இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |